# இந்தியாவில் அச்சிடப்பட்ட ஈழத்தமிழ் பேசும் சமூகம் சார்ந்த ஆவணங்களை ஆவணப்படுத்தல் - 2022

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | இந்தியாவில் அச்சிடப்பட்ட ஈழத்தமிழ் பேசும் சமூகம் சார்ந்த ஆவணங்களை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2022/104 |
| செயற்றிட்ட இடம் | இந்தியா |
| செயற்றிட்டக் காலம் | ஜூலை 2023 - டிசெம்பர் 2024 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | தமிழ் சைவ நெறிக்கூடம் சுவிஸ்சர்லாந்து |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நூலக நிறுவனம் |
| செயற்றிட்டச் செலவுகள் | |

அறிமுகம்

அச்சு வரலாற்றில் ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே மிக நீண்ட தொடர்பு இருந்திருக்கிறது. தொடக்கக் காலத்தில் வெளிவந்த கிறிஸ்துவ பைபிள், வழிபாட்டு நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் வெளியிட்டனர். இந்த பணியில் தமிழகத்தைச் சேர்ந்தவரும் ஈழத்தைச் சேர்ந்தவர்களும் பெரும் பங்காற்றியிருக்கின்றனர். தமிழில் முதல் அச்சு நூலாகக் கருதப்படும் தம்பிரான் வணக்கம் நூல் உருவாக்கப்பணியில் கொழும்பில் உள்ள பாதிரியாரின் பங்கைப் பற்றி ஜெயசீலா ஸ்டீபன் குறிப்பிடுகிறார். தொடக்கத்தில் கிறித்துவ மதம்சார்ந்த நூல்கள் மட்டுமே பதிப்பிக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள் தங்களுடைய காலனிய நாடுகளில் தங்களுடைய அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்குக் காலனிய நாட்டின் மக்களின் மனநிலையையும், அவர்களின் பண்பாட்டையும் தெரிந்து கொள்ள விரும்பினர். ஆகையால், காலனிய அதிகாரிகளுக்குக் காலனிய மொழிகளையும் பண்பாட்டையும் கற்றுக் கொடுத்தனர். இதற்காகப் பல்வேறு கல்லூரிகள் தோற்றுவிக்கப்பட்டன. இந்தியால் கல்கத்தாவிலும், சென்னை மாகாணத்திலும் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. சென்னை மாகாணத்திலிருந்த சென் ஜார்ஜ் கல்லூரி தமிழ் இலக்கியம் இலக்கணங்கள் மீது அதிகம் ஆர்வத்தை செலுத்தினர். இக்கல்லூரியினால் பல தமிழ் நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. இக்கல்லூரியச் சேர்ந்த பிரான்சிசு வைட் எல்லிசால்(Francis Whyte Ellis) தான் திருக்குறள் முதல் முதலா ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டது. திராவிட மொழிக்குடும்பம் என்ற கருத்தாக்கம் உருவாக்கப்பட்டதில் இக்கல்லூரியின் பங்கு குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் பல தமிழ் ஆய்வாளர்கள் ஓலைச் சுவடியிலிருந்த தமிழ் இலக்கிய, இலக்கணங்களைப் படியெடுத்துப் பதிப்பித்தனர். அவர்களில் முக்கியமானவர்களாக அ. தாண்டவராய முதலியார், சிவக்கொழுந்து தேசிகர், திருத்தணிகை விசாக பெருமாளையர், களத்தூர் வேதகிரி முதலியார், புஷ்பரதஞ்செட்டியார், ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரன் பிள்ளை, மழவை மகாலிங்கையர், உ.வே. சாமிநாதையர், ச, வையாபுரிப்பிள்ளை ஆகியவர்களை குறிப்பிடலாம். இதில் ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரன்

பிள்ளை ஆகிய இருவரும் ஈழத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆறுமுக நாவலர் சென்னை தங்கசாலைத் தெருவில் வித்தியானுபாலன அச்சம் ஒன்றை நிறுவினார். இதே போன்று சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் அச்சுக் கூடத்தை நிறுவி தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவம் மதம் சார்ந்த நூல்களைப் பதிப்பித்தார்.

இக்காலக்கட்டத்தில் ஈழத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் தங்களுடைய நூல்களைத் தமிழகத்தில் பதிப்பித்திருக்கின்றனர். இதற்குச் சான்றாக இலங்கையின் பூர்வச் சரித்திரம் புத்தகத்தை 1933ல் மொழிபெயர்த்த கீ.சி. இராமஸ்வாமி மொழிபெயர்ப்பாளர் குறிப்பில் இந்த நூலை மொழிபெயர்த்த கையெழுத்துப் பிரதியைத் தமிழகத்திற்கு அனுப்பிப் பதிப்பித்ததாகக் குறிப்பிட்டிருப்பதைக் கூறலாம். இவ்வாறு இலக்கியம், இலக்கணம், மொழிபெயர்ப்பு(இராமோதந்தம் நூல்) வரலாறு நூல்கள் தமிழகத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றனர். காலனிய அதிகாரிகள் பலர் ஈழத்தைப் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளனர். இவ்வாறு ஈழத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களையும் ஈழத்தைப் பற்றிய நூல்களையும் கவனத்தில் கொண்டு இந்த ஆய்வுத் திட்டம் அமைந்துள்ளது.

செயற்றிட்ட செயற்பாடுகள்

- வகைப்பாடு

ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் அடையாளம் காணப்பட்ட ஈழம் சார்ந்த ஆவணங்கள் மூன்றாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது

1. ஈழம் பற்றி ஈழத்தமிழர்களால் எழுதப்பட்ட ஆவணங்கள்
2. ஈழம் பற்றி தமிழக தமிழர்களால் எழுதப்பட்ட ஆவணங்கள்
3. ஈழம் பற்றி தமிழர் அல்லாதவர்களால் எழுதப்பட்ட ஆவணங்கள் (இந்தியர்கள்,ஐரோப்பியர்கள், சிங்களவர்கள்).

- ஆவணங்கள்

ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் மொத்தம் 114936 ஆவணங்கள் இருக்கின்றன. இவற்றில் 114936 ஆவணங்கள் இதுவரை கள ஆய்வாளரால் சரி பார்க்கப்பட்டிருக்கிறது. இவற்றில் 1735 ஆவணங்கள் ஈழம்பற்றி ஆவணமாக அடையாளம் காணப்பட்டிருக்கிறன. இந்த ஆவணங்களை அடிப்படையாக கொண்டு எழுத்தாளர்களில் பட்டியல் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த பட்டியல் அடிப்படையில் ஈழத்தைப் பற்றி எழுதி தமிழக எழுத்தாளர்கள் 76, ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் 281, தமிழர் அல்லாதா எழுத்தாளர்கள் 37 .

கன்னிமாரா பொது நூலகத்திலிருந்து 203 ஈழம் தொடர்பான ஆவணங்கள் அடையாளம் காணப்பட்டிருகின்றன. இந்த ஆவணங்கள் தமிழ் எழுத்தாளர்களால் எழுதப்பட்ட ஆவணங்கள் தமிழர் அல்லாத எழுத்தாளர்களால் எழுதப்பட்ட ஆவணங்கள் என்று இரண்டாக வகைப்படுத்தப்பட்டிருகின்றன. இவற்றில் 80 ஆவணங்கள் தமிழ் எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. 122 ஆவணங்கள் தமிழர் அல்லாதா எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருகின்றனர். கன்னிமாரா பொது நூலகத்தில் University Of Ceylon Review , Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society ஆகிய இரண்டு இதழ்களின் முழுமையானத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. கன்னிமார பொது நூலகத்தில் அடையாளம் காணப்பட்ட நூல்கள் இலங்கை தாவரவியல், விலங்கியல், அரசியல், இந்தியா இலங்கை தொடர்பு, சோழர்களுக்கும் இலங்கைக்கும் இடையேயானத் தொடர்பு, இனப்பிரச்சினை, இர்ராமாயணம், தமிழக அரசியல் கட்சிக்களுக்கும் இலங்கைக்கும் இடையேயான தொடர்பு, தமிழ்நாட்டுக்கும்

இலங்கைக்கும் இடையேயான தொடர்பு, இலங்கை வரலாறு, சாதியத்துக்கு எதிரான போராட்டங்கள், மலையக தமிழர்கள் போராட்டாங்கள், முஸ்லிம் வாய்மொழி வழக்காறுகள், பயண நூல்கள் முதலியவற்றை அடிப்படையாக கொண்டு அமைந்திருக்கின்றன.

எழுத்தாளர்களின் பெயர் பட்டியல்

இதுவரை அடையாளம் காணப்பட்ட எழுத்தாளர்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் | தமிழக எழுத்தாளர்கள் | தமிழர் அல்லாதா எழுத்தாளர்கள் |
|---|---|---|
| 1. ஆ. வேலுபிள்ளை<br>2. சே. கணேசலிங்கம்<br>3. எஸ். பத்பநாதன்<br>4. சி. நாகலிங்கம்<br>5. சின்னப்பா அரசரத்தினம்.<br>6. ஆனந்த குமாரசுவாமி<br>7. கார்திகேசு சிவதம்பி<br>8. அம்பிகை பாகன்<br>9. அருள்செல்வநாயகம்<br>10. அ. அமிர்தலிங்கம்<br>11. ஆசி. கந்த ராஜா<br>12. முகமத் ஷமிம்<br>13. ராதிகா குமாரசுவாமி<br>14. குமாரசுவாமி பிள்ளை<br>15. கே. கைலாசபதி<br>16. திரு ஆறுமுகம்<br>17. பொன்னம்பலம் அருணாச்சலம்<br>18. பொன்னம்பலம் ராமநாதன்<br>19. இ. கந்தையா<br>20. வில்சன் ஜெயரத்தினம்<br>21. கே. நவரத்தினம்<br>22. எஸ். சுசிந்திர ராஜா<br>23. எஸ். தனசெய ராஜசிங்கம்<br>24. தேவசேனா லக்ஷ்மன் (doubt).<br>25. சரவணன் சார்லஸ் பொன்னுதுரை.<br>26. முத்து குமாரசுவாமி<br>27. செங்கை ஆழியன்<br>28. எஸ். முத்தையா (doubt)<br>29. சி. பத்பநாதன்<br>30. சோ. சிவபாத சுந்தரம்<br>31. டி. எம். சபாரத்தினம்<br>32. வாம தேவன்<br>33. மனோகரன் செல்வதுரை<br>34. சிவபாத சுந்தரம் | 1. மு. இராமனாதன்<br>2. த. கைலாசபிள்ளை<br>3. மு. மணிமேகலை<br>4. கே. என். கோவிந்தன்<br>5. என். குணசேகரன்<br>6. இரா. சனார்தனம்<br>7. செம்பியன்<br>8. எஸ்வி. இராஜாதுரை<br>9. கி.வா. ஜகநாதன்<br>10. கோபண்ணா<br>11. ஆர். எஸ். நாதன்<br>12. பி.சண்முகம்<br>13. த.க. திருநாவுக்கரசு<br>14. எ.ஜே. இதயா<br>15. ஜெயமோகன்<br>16. குணா<br>17. தா.செ கொளத்தூர் மணி<br>18. புலவர் வே. பிரபாகரன் | 1. Neha Singh<br>2. Nirupama Subramanian<br>3. Jaince Jigggins<br>4. Bryce Ryan<br>5. Tennet James Emerson<br>6. Argus john tresidder<br>7. Farmer, BH<br>8. Alfred Clark<br>9. William Howard Wriggins<br>10. Sir Charles Joseph Jeffries<br>11. S. N. W. Hulugalle<br>12. Kearney robert. w<br>13. Moldeniya<br>14. Drummond. R<br>15. Bruce Calledwel<br>16. Nihal Fernando<br>17. Nitina Gakhale<br>18. Marie Higgins Musaeus<br>19. Lutz oette<br>20. Robert N. Kearney<br>21. E. F. C. Ludowyk(born in ceylon)<br>22. L. E. Blaze<br>23. Erwin Drinnenberg<br>24. Anagarika Dhamapala<br>25. Walpola Sri Rahula<br>26. Curuppumallage Jinarajdasa<br>27. Wimal Dissanayake |

35. அருள் செல்வநாயகம்
36. கந்தையா வைத்தியநாதன்
37. அம்பலவாணர் சிவநாதன்
38. எஸ். துரை ராஜசிங்கம்
39. அடேல் பாலசிங்கம்
40. கனகசபாபதி சரவணபவன்
41. க. அருணாசலம்
42. அ. சதாசிவம்பிள்ளை
43. அ. வில்வரத்தினம்
44. சரவணமுத்துபிள்ளை
45. சி. மௌனகுரு
46. அம்பலவாணர் சிவராஜா
47. செ. யோகநாதன்
48. எம்.ஏ. நுஃமான்
49. க. வேலுப்பிள்ளை
50. ந. சிவநாதன்
51. இராமசாமி பிள்ளை(doubt)
52. கோ. நடேசய்யர்
53. க.சி. குலரத்தினம்
54. க. சிவராமாலிங்கப்பிள்ளை
55. மானா மக்கீன்
56. ஐ. நடேசன்
57. நா. க. தங்கரத்தினம்
58. அ. குமாரசுவாமிபுலவர்
59. ஆறுமுக நாவலர்
60. சி. கணபதிபிள்ளை
61. த. இராமநாதன்பிள்ளை
62. என். சண்முகலிங்கம்
63. சமுத்திரன்(doubt)
64. மு. இராமலிங்கம்
65. மாத்தளை சோமு
66. வே. அந்தனிஜான் அழகரசன்
67. அ. முகமது சமீம்(doubt)
68. க. கணபதிபிள்ளை
69. முருகர் குணசிங்கம்
70. சண்முகப்பிரபு நல்லையா
71. தம்பி ஐயா தேவதாஸ்

19. இராஜேந்திர சோழன்
20. வை. கோபாலசாமி
21. கே. எஸ். இராதாகிருஷ்ணன்
22. கு.வெ.கி. ஆசான்
23. ஏ.இளஞ்செழியன்
24. கண்ணதாசன்
25. சாலை இளந்திரையன்
26. பழ. நெடுமாறன்
27. ஜெ. பிரபாகரன்
28. தொல். திருமாவளவன்
29. இரா. இளங்குமரன்
30. முகவை முத்து
31. சுப. வீரபாண்டியன்
32. க.ப. அறவாணன்
33. வே. தங்கநேயன்
34. கே.கே. ரமேஷ்
35. விடுதலை இராசேந்திரன்
36. ச. சுதாகர்
37. வே. பிச்சைமுத்து
38. பு.சி கணேசன்
39. செ. இராசு
40. வி. சூரிய நாராயணன்
41. சி. எஸ் ஜோதிவேல் நாயனார்
42. அண்ணா கண்ணன்
43. சண்முகானந்த சுவாமி

28. Vijayatunga
29. Gananath Obeyesekere
30. Susunaga Weeraperuma
31. Wimal Dissanayake
32. Ranjini obeyesekere
33. Uduwara jayanta
34. Lakshman S. Perera
35. Weerasooria, W.S.
36. Susumu Ōno
37. sulak sivaraksa
38. Parker H
39. Wijemanne(A)
40. Bond (Thomas E T)
41. Randow(Heinz)
42. Haeckel(Ernst)
43. Parker(H)
44. Macmillan(H.F)
45. Yalman
46. Hall(Capilain Basil)
47. Mount(Frederic J)
48. Katiresu(S)
49. Saibaba(V.V.S)
50. Rettie(Clarie)
51. Da Cunha(Gerson J)
52. Poulose(TJ)
53. Simon Casie Chitty
54. Arulanandu(T)
55. Escherich, K
56. Matti Rachit Susmachar
57. Peris(Ralph)
58. Livinstone(Samuel)
59. Arunachalam(P)
60. Silva(KM DE)
61. Hornell(james)
62. S. P. Amarasingam
63. Baker(w)
64. Herdman(WA)
65. Twynam
66. Leach(ER)
67. Gubta(Babu Lal)
68. Selkirk(James)
69. Winckworth(R)

72. சி.அ. யோதிலிங்கம்
73. சோ.சந்திரசேகர்
74. M. L. A காதர்
75. ஏகை சிவசண்முகபிள்ளை(doubt)
76. மா. செ. மூக்கையா
77. கா.பொ. இரத்தினம்
78. கார்திகேசு இந்திரபாலா
79. ஆதவன் சேதுவராயன்
80. தி. இராசப்பா(doubt)
81. இ. சிவகுருநாதன்
82. சுப்பரமணி விசாகன்
83. றவூப் ஸெய்ன்
84. கநகசபாபதி ஐயர்
85. றஷ்மி
86. மு. திருச்செல்வம்
87. அருணகிரி நாதன்.ப(doubt)
88. பாவைசந்திரன்(doubt)
89. ந. செல்வராஜா
90. பண்டிதர்(கணபதிபிள்ளை)க. சச்சிதானந்தன்
91. சோமா கந்தன்
92. சி.வை. தாமோதரன் பிள்ளை
93. எஸ். கருணாந்த ராஜா
94. கே.வி. எஸ். வாஸ்
95. டொமினிக் ஜீவா
96. பாலசுகுமார்
97. கே.எஸ்.சிவகுமார்
98. இளையத்தம்பி பாலசுந்தரம்
99. வ.ஐ. ச. ஜெயப்பாலன்
100. க.செ. நடராசா
101. வசந்தா நடராசன்(doubt)
102. கயல்விழி(doubt)
103. சி. கணேசையர்
104. க. தங்கேஸ்வரி
105. அருள் செல்வநாயகம்
106. முல்லைத் 'தீ'வான்
107. பொன் பூலோகசிங்கம்
108. ந.சி. கந்தையாபிள்ளை

44. இராமசுந்தரம்
45. முகம்மது அலி(doubt)
46. தா. தேச இலங்கை மன்னன்
47. சி. தியாகராச செட்டியார்
48. விஜேந்திரன் சிலோன்(இலங்கையில் பிறந்து தமிழ்நாட்டில்
49. வேலைச் செய்த நடிகர்)
50. டி. எம் பீர்முகம்மது
51. உ. வே. சாமிநாதையர்
52. குலசை வீரன்
53. கே. பகவதி.
54. சி. ஆறுமுகம்
55. கதிர் தணிகாசலம்
56. ஈ.வே. தந்தை பெரியார்
57. பத்மினி தற்குணராஜா
58. மு. வரதராசன்
59. இரா. சுப்பராயலு
60. தண்டபாணி சுவாமிகள்
61. சிங்காரவேலன்
62. பட்டினத்தார்
63. ஏரம்பையர், மாதகல்
64. சுந்தர் கணேசன்
65. Vijayathilakan
66. விஜயதிலகன்
67. மீனாச்சி சுந்திரம்பிள்ளை
68. எஸ். ஆர். சின்னதம்பி

70. Coomarswamy(M)
71. Wall (Frank)
72. Franch(FG)
73. Moore(F)
74. Hally(H)
75. Mitton G. E
76. Raghavan(M D)
77. Pieris(PE)
78. Obeyesekere(Gananath)
79. Sarkar(MC)**(vol 1)**
80. Sarkar(MC)**(vol 2)**
81. Pieters(Sophia)
82. Perera(SG)
83. Sterndale(Robert A)
84. Parker H
85. Geiger(Wilhem)
86. Robert Knox
87. Sarkar(MC)
88. Murrary(James.A)
89. Price(F.A.E)
90. Skinner(Major Thomas)
91. Root(Helen.I)
92. Mendis
93. Bimala churn
94. Davids(Rhys T W)
95. Walters(Alan)
96. Mouat(F.J)
97. Murray(James.A)
98. Wijesinha(Mudaliyar,L.C)
99. Vogel(J.Ph),Barnouw(A.J)
100. Tennent(James E)
101. Valentia(George Viscount)
102. John Murray
103. Macmillan(HF)
104. Cumming(John)
105. Kegan Paul
106. Spate(OHK)
107. Farer Reginald
108. Mason(Philip)
109. Raghavan(M.D)
110. RAO(AR)
111. Blaze(LE)
112. Turner(LJB)

| | | |
|---|---|---|
| 109. பெ. முத்துலிங்கம்<br>110. அ. முத்துலிங்கம்<br>111. க. வீரகத்தி(doubt)<br>112. சிலோன் விஜேந்திரன்<br>113. வ. செல்லையா<br>114. நா. முத்தையா<br>115. க.ந. வேலன்<br>116. த. துரைசிங்கம்<br>117. மு. தளையசிங்கம்<br>118. ஆ. இரத்தினசபாபதி<br>119. இரா. கனகரத்தினம்<br>120. கு. றஜீபன்<br>121. கல்முனை முபாறக்<br>122. சி.வை. தாமோதரன் பிள்ளை<br>123. கடவுண் மாமுனிவர்<br>124. ஏ.சி. றாஹில்<br>125. நாகலிங்கம் பிள்லை<br>126. வெள்ளையப்பையர்(doubt)<br>127. சந்தனா நல்லிங்கம்<br>128. குல. சபாநாதன்<br>129. வி. கந்தவனம்<br>130. க.ந.க. சபாபதி ஐயர்<br>131. சிவபாதசுந்தரம்<br>132. செ. தனபால சிங்கன்<br>133. குருமூர்த்தி ஐயர்<br>134. ஈழத்துச் சுப்பையாப் புலவர்<br>135. எஸ். எம். கமால்தீர்<br>136. கலாநிதி. நா. சுப்பரமணியன்<br>137. வி. என்.எஸ் உதயச்சந்திரன்<br>138. கணக செந்தில்நாதன்<br>139. இராஜ அரியரத்தினம்<br>140. சின்னத் தம்பிப் புலவர்<br>141. சி. கனகசபாபதி<br>142. க. செபரத்தினம்<br>143. அண்ணா கண்ணன்<br>144. கணகசபாபதி சரவணபவன்<br>145. சிவசிதம்பர ஐயர்<br>146. செம்பியின் செல்வன்<br>147. துரை இராஜசிங்கம்(இலங்கை வம்சாவளி)<br>148. ஆ. வேலுப்பிள்ளை | 69. கே. ஆர். ராதாகிருஷ்ணன்<br>70. பி. எம். செல்லதுரை<br>71. எம். டி. இராகவன்<br>72. கே. சி. சங்கரநாராயணன்<br>73. சம்பத் ஐயங்கார்<br>74. சூரிய நாராயணன்<br>75. வாம தேவன்<br>76. வி. ஆர். கிருஷண ஐயர்<br>77. ஜெயராஜ் செம்பூர்<br>78. தியாகராசன் க | 113. Smith(Vincent A)<br>114. Subramanier Katiresu<br>115. Margaret Jones |

| | | |
|---|---|---|
| 149. சி.வி. வேலுப்பிள்ளை<br>150. நாகலிங்கப் பிள்ளை<br>151. சுப்பிரமணிய தேசிகர்<br>152. கந்தையா<br>153. கந்தப்ப சுவாமிகள்<br>154. இ. சிவகுருநாதன்<br>155. அந்தனி ஜீவா<br>156. நா. கதிர்வேற்பிள்ளை<br>157. பிரமிள்(தருமு சிவராமன்)<br>158. செ. க. கதிர்காமநாதன்.<br>159. சுப்பரமணிய தேசிகர்.<br>160. ஆறுமுகப்புலவர் சுப்பிரமணியன்<br>161. கு. பூரணானந்தா<br>162. ஹமீதா பானு<br>163. சக்திவேற்பிள்ளை<br>164. காசிவாசி செந்திநாதையர்.<br>165. யாழ். சி. செல்லையாபிள்ளை<br>166. சபாபதி நாவலர்<br>167. த. குமாரசுவாமி பிள்ளை<br>168. வி. என். எஸ் உதயசந்திரன்.<br>169. வி. கந்தவனம்<br>170. சதாசிவம் பிள்ளை<br>171. கந்தையா குணராசா<br>172. சின்னத்தம்பி புலவர்<br>173. குமாரசுவாமி குருக்கள்<br>174. சங்கரபண்டிதர்<br>175. முத்துகுமார கவிராயர்.<br>176. சி.வி. விக்னேஸ்வரன்<br>177. சுவாமி விபுலானந்தர்<br>178. க. சி. நடராஜன்<br>179. சுவாமிநாத பண்டிதர்(வண்ணை நகர்)<br>180. ச. ஸ்ரீசக்தி<br>181. க. சச்சிதானந்தன்<br>182. ஜே. ஆர். சின்னத்தம்பி<br>183. பொன். முத்துக்குமாரன் | | |

| | | |
|---|---|---|
| 184. மனோன்மணி சண்முகதாஸ்<br>185. ந. பாலேஸ்வரி<br>186. புனல். க முருகையன்<br>187. சி.பொன்னையா<br>188. வரதராஜ பண்டிதர்.<br>189. யாழ்பாணம் புலோலி நகர் சு. சிவபாத சுந்தரம்<br>190. இராசையா ஸ்ரீதரன்<br>191. ச. தம்பையா(யாழ்பாணம் வட்டுகோட்டை உபாத்தியார்)<br>192. மு. கந்தையா<br>193. சைவபிரகாச சமாசீயர்(சைவதூஷன பரிகாரம்)<br>194. சிவசிதம்பர ஐயர்<br>195. நாகலிங்கப் பிள்ளை<br>196. இராமலிங்க முனிவர்<br>197. இருபாலைச் செட்டியார்<br>198. இராமசந்திரன். க<br>199. த. க. சுப்பராய செட்டியார்<br>200. வையாபுரி ஐயர்<br>201. சூசைப்பிள்ளை மரிசாற்பிள்ளை(மாதோட்ட்டம்)<br>202. சு. வித்தியானந்தன்<br>203. கலைவாணி நடராசா<br>204. கே. டானியல்<br>205. த. குமாரசுவாமிப் பிள்ளை<br>206. எஸ். என். கணேசம் பிள்ளை<br>207. டி. சரவணமுத்துப் பிள்ளை<br>208. ஆ. சக்திவேற்பிள்ளை<br>209. த. சபாரத்தினம்<br>210. சோ. இளமுருகனார்<br>211. தொ. பத்தினாதன்<br>212. மு. கணபதி பிள்ளை<br>213. இரா. கனகரத்தினம்<br>214. ஞானப்பிரகாசர்(நல்லூர்)<br>215. தர்க்குடார தாலுதாரி<br>216. ஜெயராஜ்<br>217. மு. இராமலிங்கம் | | |

| | | |
|---|---|---|
| 218. பொன்னையன்(நீர்வை)<br>219. எஸ். எம். கமால்தீன்<br>220. முருகையன்<br>221. பரமு புஷ்பரட்ணம்<br>222. தி.க. கந்தையாபிள்ளை<br>223. ஸ்ரீகந்தராசா. சு<br>224. வி. செல்வ்விநாயகம்<br>225. ஜே. ஆர். சின்னத் தம்பி<br>226. ஆ. இரத்தினவேலோன்<br>227. கே. எஸ். சிவகுமாரன்<br>228. சிவானந்த அடிகள்<br>229. கணபதிபிள்ளை சச்சிதானந்தம்<br>230. இ.க. சிவஞானசுந்தரம்<br>231. த. கனகரத்தினம்<br>232. தனஞ்சய ராசாசிங்கம்<br>233. மு. தியாகராசா<br>234. ச. பூபால பிள்ளை<br>235. எஸ். எஸ். ஆனந்தன்<br>236. தேவகாந்தன்<br>237. பாலசுகுமார்<br>238. க.தா. செல்வராச கோபால்<br>239. வசந்தன்<br>240. வி.சீ. கந்தையா<br>241. பொ. கந்தையா<br>242. குலசபாநாதன்<br>243. க.சி. குலரத்தினம்<br>244. வரத சுந்தரம்.<br>245. வே. அகிலேச பிள்ளை<br>246. வ.மு. இரத்தினேசுரையர்<br>247. அ. வரதராஜ பண்டிதர்<br>248. வி. கந்தவனம்<br>249. மனோன்மணி சண்முகதாஸ்<br>250. பாலேஸ்வரி<br>251. ச. பொன்னம்பலபிள்ளை<br>252. யாழ்பாணத்து வட்டுகோட்டை, ஆ. அம்பலவாண நாவலர்<br>253. ம. தில்லைநாத நாவலர்<br>254. கனக, செந்திநாதன் | | |

| | | |
|---|---|---|
| 255. யாழ் பாலசுந்தரம்<br>256. செ. யோகநாதன்<br>257. சபா நாவலன்<br>258. பி. றயாகரன்<br>259. தர்ம குலசிங்கம்<br>260. கைலாசபிள்ளை<br>261. மாத்தளை சோமி<br>262. குல சபாநாதன்<br>263. செ. தனபாலசிங்கன்<br>264. த. இராமநாதபிள்ளை<br>265. மு. ஞானப் பிரகாசம்<br>266. விநாயக மூர்த்திச் செட்டியார்<br>267. க. சோமசுந்தரம் பிள்ளை<br>268. இருபாலைச் செட்டியார்<br>269. சங்கரபண்டிதர்<br>270. எம். பி. எம். பைரூஸ்<br>271. சிவலிங்கராஜா<br>272. குமாரசாமி, செல்லையா<br>273. பொ. பத்மநாதன்<br>274. ஸ்ரீ. ஜோன்ராஜன். எஸ்<br>275. செம்பியன் செல்வன்<br>276. அஹமத், வை<br>277. ஞானரதன்<br>278. பேரன், நெல்லை க<br>279. கிருஷ்ணமாச்சாரியர்<br>280. ரகுராகவன், க<br>281. சபாரத்தினம், சசிபாரதி. சு<br>282. பொ. சங்கரப்பிள்ளை<br>283. சி. சிவசேகரம்<br>284. க. கணபதி பிள்ளை<br>285. வ. தம்பிப்பிள்ளை<br>286. பூ. பொன்னம்பலபிள்ளை<br>287. எஸ். ஜேசுறட்ணம்<br>288. சிவராஜா அம்பலவாணர்<br>289. க. சபா ரெத்தினம்<br>290. சு. வரதராஜ பண்டிதர்<br>291. சந்திர சேகர பண்டிதர்<br>292. க. சச்சிதானந்தம்<br>293. வள்ளி நாயகி இராமலிங்கம் | | |

| | | |
|---|---|---|
| 294. ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை<br>295. தர்க்குடார தாலுதாரி<br>296. அரசகேசரி<br>297. இரத்தினேசுவரையர். வ. மு<br>298. ஞானபிரகாசமுனிவர்<br>299. சொ. முருகேச முதலியார்<br>300. கா. கைலாசநாதக் குருக்கள்<br>301. நடராஜன் நாவாலியூர்<br>302. கனக சபாபதி சரவணபவன்<br>303. வி. கந்தவனம்<br>304. ராஜகோபால்<br>305. றஸ்மினா றாஸிக்<br>306. என். எஸ் இரத்தினசிங்கம்<br>307. யாழ் நடராசா<br>308. நயீமா சித்தீக்<br>309. டொமினிக் ஜீவா<br>310. அப்துல் மஜித்<br>311. இரத்தில வேலோன்<br>312. முகமது சமீம்<br>313. ஜீவராமு, பிரமிள் தர்மோத்<br>314. பொ. ஐங்கரநேதன்<br>315. பத்மா சோமாகந்தன்<br>316. ஜே. விஜயதுங்கா<br>317. தனபாலசிங்கம் கிருஷ்ணமோகன்<br>318. ஜெபநேசன் (எஸ்)<br>319. பத்மநாதன்(சி)<br>320. அம்மன்கிளி முருகதாஸ்<br>321. தம்மையாத் தேவதாஸ்<br>322. அனல்(எம். எஸ். எம்)<br>323. இந்திரபாலா(கா)<br>324. முருகர் குணசிங்கம்<br>325. கலாநிதி குமார் ரூபசிங்க<br>326. யோதிலிங்கம்(சி.அ)<br>327. அஸீஸ்(எ. எம்.எ)<br>328. நவரத்தினம்(க)<br>329. ராமநாதன்(கே)<br>330. அங்கமுத்து(ஆ) | | |

| | | |
|---|---|---|
| 331. சபாநாதன்(குல)<br>332. யோதிலிங்கம்(சி.அ)<br>333. குமாரவேல்(வே)<br>334. கௌரி சண்முகலிங்கன்<br>335. வெகுஜனன் மற்றும் இராவணா<br>336. அருணாசலம்(க)<br>337. கீதபொன்கலன்(எஸ். ஐ)<br>338. குமாரி ஜெயவர்த்தனா<br>339. குலரத்தினம்(க.சி)<br>340. சிவானந்தா<br>341. மனோகரன்(ஆ.க)<br>342. நித்தியானந்தம்(வி)<br>343. பவன்<br>344. மூக்கையா(மாசெ)<br>345. இரயாகரன்(பி)<br>346. சுந்திரம் பிள்ளை (எஸ்)<br>347. சித்திரலேகா(மௌ) | | |

அடைவுகள்

## மொத்த ஆவணங்கள்

ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் அடையாளங்காணப்பட்ட ஆவணங்கள் 1,735

கன்னிமாரா பொது நூலகத்தில் அடையாளங்காணப்பட்ட ஆவணங்கள் 203

மொத்தமாக அடையாளங்காணப்பட்ட ஆவணங்கள் 1,938

## நூலகங்கள்

ரோஜா முத்தையா ஆய்வு நூலகம் தவிர பிற இடங்களில் சேகரித்த ஆவணங்களும் இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. நூலகம் இணையத்தளத்தில் இல்லாத ஈழம் சார்ந்த நூல்கள், வெவ்வேறு பதிப்புகள் ஆகியவற்றை வெவ்வேறு இணைய நூலகங்களிலிருந்து சேகரிக்கும் பணியும் இதன் கீழ் செய்யப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட ஆவணங்கள் பற்றி விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## தமிழ் இணையக் கல்விக் கழகம்

தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் பணிபுரியும் விஜய வேலன் என்பவரிடமிருந்து இலங்கையைச் சார்ந்த 5 அச்சு பிரதிகளும் இரண்டு காணொளி ஆவணங்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

## தமிழ் இணைய நூலகம்

### உமா வாசகம்

உமா வாசகம் 1920 இயற்றப்பட்ட புதிய கல்விக் கொள்கையைச் சார்ந்து வெளியிடப்பட்ட பாடப்புத்தகம் . உமா வாசகம் என்ற பெயரில் இந்த நூல்கள் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் உமாதேவன் கம்பெனியும் இலங்கையில் கலைவாணி புத்தகம் நிலையமும்(கண்டி) இந்த பாட நூல்களை வெளியிட்டனர்.

உமா வாசகம் இரண்டாவது மற்றும் நான்காவது புத்தகங்கள் மட்டுமே நூலகம் இணையத்தளத்தில் இருக்கிறது. இரண்டாவதின் திருந்திய பதிப்பு, ஆறுவது, ஏழாவது புத்தங்கள் இல்லை. இவற்றைத் தமிழ் மின் நூலகத்திலிருந்து பதிவிறக்கம் செய்து சேகரிக்கப்பட்டிருக்கிறது.

### இலங்கையின் பூர்வச் சரித்திரம்

இது ஈழ வரலாறு பற்றிய சுருக்கமான நூல். இந்த நூலை ஜீ.வி. மென்டிஸ் என்பவர் ஆங்கிலத்தில் எழுதினார். இந்த நூலை மென்டிஸ் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும் படி கீ. சி. இராமஸ்வாமியிடம் கேட்டதாக மொழிபெயர்ப்பாசிரியரின் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இந்த மொழிபெயர்ப்பு நூல் சென்னை பட்டனத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. Madras Law journal press, Mylapore, Madras என்ற அச்சகத்தில் 1933 வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த புத்தகம் மீண்டும் 1942ல் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த புத்தகத்தை நவாலியூர் சோ. நடராஜன் மொழிபெயர்த்திருக்கிறார். இது கொழும்பு அப்போதிக்கரீஸ் கம்பெனி வெளியிடப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பாசிரியர் குறிப்பில் இலங்கைச் சரித்திரம் முதல் இரண்டு பாகங்களை மொழிபெயர்த்து உள்ளதாகவும் இது மூன்றாவது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து இலங்கைச் சரித்திரம் மூன்று பாகமா இவரால் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது தெரியவருகிறது. இச்செய்தி முந்தை மொழிபெயர்ப்பாசிரியர் குறிப்பில் இல்லை. இதிலும் மென்டிஸ் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மொழிபெயர்க்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். ஏன் மென்டிஸ் இரு வெவ்வேறு ஆசிரியர்களை ஒரே புத்தகத்தை மொழிபெயர்க்கும் படி கேட்டிருக்கிறார் என்பதற்கான காரணம் தெரியவில்லை.

இரண்டு தமிழ் மொழிபெயர்ப்புகளுக்கு இடையே பொருளடக்கம் அடிப்படையில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த இரண்டு புத்தகத்தை முழுவதும் வாசித்து பார்க்கும் பொழுது இவற்றில் இரண்டு ஆசிரியர்களும் எத்தகைய மாற்றங்களை செய்திருக்கிறார்கள் என்பதை அறியமுடியும்.

சோ. நடராஜன் மொழிபெயர்த்த புத்தகம் நூலகம் வலைத்தளத்திலிருக்கிறது. கீ. சி. இராமஸ்வாமியிடம் மொழிபெயர்ப்பு இல்லை.